கேள்வி : சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகம் செய்யப்பட்டு வரும் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு நியாயவிலைக்கடைகளில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் சரிவர கிடைக்கப்பெறாதது ஏன் ?

பதில் : வெளிச்சந்தையில் பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலையேற்றத்தினை கட்டுப்படுத்தவும், ஏழை, எளிய மக்களை விலைவாசி உயர்விலிருந்து காக்கும் வண்ணமாக தமிழக அரசு சிறப்பு பொதுவிநியோகத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை நியாயவிலை கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் வகையில் இப்பொருள்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் மாத இறுதியில் நியாயவிலை கடைகளில் இப்பொருள்களை வாங்க விரும்பும் குடும்ப அட்டைதாரர்களுக்கு இருப்பு இல்லாத காராணத்தினால் வழங்க இயலாத நிலையில் அட்டைதாரர்களின் விவரங்களை ஒரு பதிவேட்டில் பதிவு செய்து அத்தகைய குடும்ப அட்டைதாரர்களுக்கு தொடர்ந்து வரும் மாதத்தில் முன்னுரிமை அளித்து முதல் நாளிலிருந்து வழங்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

## நியாயவிலைக் கடைகள்

பெரும்பாலான நியாய விலை அங்காடிகள் கூட்டுறவு சங்கங்களாலும், குறைந்த எண்ணிக்கையிலான நியாய விலை அங்காடிகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன. மகளிர் சுயஉதவி குழுக்களால் சில நியாய விலைக் கடைகள் நடத்தப்படுகின்றன.

- முழு நேர நியாய விலைக் கடைகள் அமைக்க நகர்ப்புறங்களில் குறைந்தது 800 குடும்ப அட்டைகளும், கிராமப்புறங்களில் 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும்.

- பகுதி நேர நியாய விலை கடைகளைப் பொருத்த வரையில், தாய் கடையில் குறைந்த பட்சம் 500 குடும்ப அட்டைகளும், பகுதி நேரக் கடையில் குறைந்த பட்சம் 150 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும்.

- பகுதி நேரக் கடை அமைக்க அரசு / பஞ்சாயத்துக்கு சொந்தமான கட்டிடம இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

- புதிய பகுதி நேரக் கடை திறக்க தாய்க்கடைக்கும் பகுதி நேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்தது 1.5 கி.மீ. இருக்க வேண்டும்.

## நியாய விலை அங்காடி செயல்படும் நேரம் :

- சென்னை மற்றும் புறநகர் பகுதிகள் : காலை 8.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை
  பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை
- இதரப் பகுதிகள் : காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை
  பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

## அத்தியாவசியப் பொருட்களின் விநியோக அளவு

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. சிறப்பு பொது விநியோகத் திட்டதத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் வழங்கப்படுகின்றன. அவற்றின் விலை மற்றும் வழங்கல் அளவு விவரம் பின்வருமாறு :

| வ. எண். | பொருள்கள் | விற்பனை விலை (கிலோ / லிட்டர் ஒன்றுக்கு) | விநியோக அளவு |
|---|---|---|---|
| 1 | அரிசி | இலவசமாக (மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 01.06.2011 முதல் அரிசி வழங்கப்பட்டு வருகிறது) | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 12 கிலோ, அதிக பட்சம் 20 கிலோ, நீலகிரி மாவட்டத்தில் மட்டும் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 16 கிலோ அதிக பட்சம் 24 கிலோ. அந்தியோதயா அன்னயோசனா குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 35 கிலோ, |
| 2. | சர்க்கரை | ரூ.13.50 | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு அதிக பட்ச அளவு 2 கிலோ. சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக மாதம் ஒன்றுக்கு 3 கிலோ. |
| 3 | கோதுமை | ரூ.7.50 | சென்னை நகரம் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ.<br><br>இதர பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 5 கிலோ. |
| 4 | மண்ணெண்ணெய் | ரூ.13.60 முதல் ரூ.14.20 வரை | குடும்ப அட்டைகளின் இருப்பிடம் மற்றும் எரிவாயு இணைப்பு பெற்றிருப்பதை பொறுத்து மாதம் ஒன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | 3 லிட்டரிலிருந்து 15 லிட்டர் வரை. |
| 5 | துவரம் பருப்பு | ரூ.30 | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ. |
| 6 | உளுத்தம் பருப்பு | ரூ.30 | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ. |
| 7 | பாமாயில் | ரூ.25 | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 1 லிட்டர். |

## அந்தியோதயா அன்னயோசனா திட்ட குடும்ப அட்டைகள்

வறியவர்களில் மிகவும் வறியவர்களை கண்டறிந்து அவர்களது குடும்ப அட்டைக்கு அந்தியோதயா அன்னயோசனா திட்ட முத்திரையிடப்பட்டு, 01.06.2011 முதல் 35 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

## அன்னபூர்ணா திட்டம்

முதியோர் உதவித் தொகை பெற தகுதியான நபர்களை அன்னபூர்ணா திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டு மாதந்தோறும் 10 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

## மொத்த அனுமதி

அரசு பயிற்சி நிலையங்கள், அரசு மற்றும் தனியாரால் நடத்தப்படும் முதியோர், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான இல்லங்கள், அரசு மாணவ மாணவியர் விடுதிகள், இராணுவ பயிற்சி முகாம் மற்றும் என்சிசி பயிற்சி முகாம் ஆகியவற்றிற்கு மொத்த அனுமதியின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

1. **கள்ளச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவதை தடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:**

பொது விநியோக திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் அதிக அளவு மானியத்துடன் குறைந்த விலையிலும், பொது விநியோகத் திட்ட அரிசி விலையின்றியும் வழங்கப்படுவதால், சமூக விரோதிகள் இந்த மானிய விலை பொருட்களை கடத்தி கள்ளச்சந்தையில் விற்க முயலுகின்றனர். எனவே, இத்தகைய குற்றங்களை கண்டுபிடித்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை பெற்றுத்தர அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கட்டுப்பாடு ஆணைகளின் செயலாக்கத்தினை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மேற்கொள்கிறது. மாநில அளவில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையருக்கு செயலாக்க பணிகளை நிறைவேற்ற 17 மண்டல உதவி ஆணையர்கள் மற்றும் பறக்கும்படை கண்காணிப்பாளர்கள் உதவி செய்கின்றனர். மாவட்ட அளவில், பொது விநியோகத் திட்ட செயலாக்க பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒருங்கிணைத்து கண்காணிக்கின்றனர். சென்னை நகரத்தைப் பொறுத்தவரை துணை ஆணையாளர் (ந) வடக்கு/தெற்கு ஆகியோர் பொது விநியோகத் திட்ட செயலாக்க பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுகின்றனர். அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ள பறக்கும் படைகளும் பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் முறைகேடாக கடத்தப்படுவதை தடுக்கின்றன.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டில செயல்படும் பறக்கும்படைகள் மேலும் சிறப்பாக பணிபுரிய அவைகளுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுளள்ன. அனைத்து பறக்கும்படை வட்டாட்சியர்களுக்கும் பதுக்கல், கடத்தல் தொடர்பான தகவல்களை சேகரிக்கவும், திடீர் தணிக்கைக்கு ஏற்பாடு செய்யவும் ரூ.800/– வரை ஏற்பளிக்கப்பட்ட கட்டணம் கொண்ட செல்லிடை தொலைபேசி வழங்கப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்ட பணிகளில் முனைப்புடன் செயல்படும் பொருட்டு அனைத்து மாவட்ட வழங்கல் அலுவலர்களுக்கும் மற்றும் வட்ட வழங்கல் அலுவலர்களுக்கும் முன்னதாக செல்லிடை தொலைபேசி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் நிர்வாக இயக்குநரின் நேரடி கண்காணிப்பில் விழிப்பு பணிக்குழு அலுவலர் தலைமையில் ஒரு குழு செயல்படுகிறது. இக்குழு இந்திய உணவு கழகக் கிடங்கிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத் கிடங்கிற்கு அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்லும் போதும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகக் கிடங்குகளிலிருந்து நியாயவிலை அங்காடிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லும் போது வழியில் கடத்தப்படுவது தொடர்பாக தகவல் சேகரித்து கடத்தலை தடுக்கும் பணியினை மேற்கொள்கின்றது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக விழிப்பு பணிக்குழு திடீர் தணிக்கைகள் மேற்கொண்டு தவறு செய்யும் அரவை முகவர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்கிறது.

பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் அதிக அளவில் கடத்தப்படுவதை தடுக்க குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத்துறை என்ற சிறப்பு காவல் பிரிவு செயல்படுகிறது. இவருக்கு உதவிட காவல்துறை தலைவர் மற்றும் சென்னை மற்றும் மதுரையில் காவல் கண்காணிப்பாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். மேலும் சென்னை திருச்சி மற்றும் மதுரையின் நான்கு துணை கண்காணிப்பாளர்கள் 21 அலகுகளில் கண்காணிப்புப் பணியில் செயல்பட்டு வருகின்றனர். மேலும் அரசு புதயி 12 அலகுகள் ரூ.4,25,60,958/– செலவினத்தில் 12 மாவட்டங்களில் செயல்பட அனுமதி அளித்து அரசாணை எண்.184, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (ஈ1) துறை, நாள் 31.10.2013ல் ஆணை பிறப்பிக்கப்பட்டதன் பெயரில் 12 அலகுகள் செயல்படுகிறது. இதன்படி 33 குடிமை பொருள் குற்ற புலனாய்வுத் துறை அலகுகள் காவல் ஆய்வாளர் தலைமையில் உரிய காவல் அலுவலர்கள் செயல்பட்டு வருகின்றனர். அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955–ன் கீழ் செயலாக்கத்தினை உறுதிபடுத்த இவர்களுக்கு வாகனம் மற்றும் தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 5 சிறப்பு சுற்றுக்காவல் படை எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமதி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடர் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அத்தியாவசியப் பொருட்களை கள்ளத்தனமாக கடத்தும் நபர்கள் மற்றும் சமூக விரோதிகள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் விநியோகத்தை பராமரித்தல் ஆணை 1980 மற்றும் 1955–ஆம் ஆண்டு அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. கடும் குற்றவாளிகள் தடுப்பு காவலில் வைக்கப்படுகின்றனர். மேலும், குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத்துறை அலகுகள் அத்தியாவசியப் பொருட்கள் பதுக்கல், கடத்தல் தொடர்பான தகவல்களை ரகசியமாக சேகரித்து இத்தகைய

குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர். குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை அலகுகளுககு தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டத்தை கண்காணிக்கும் அமைப்பு முறையை வலுப்படுத்த மாவட்ட ஆட்சித்த் தலைவர்கள்தலைமையில் மாவட்டந்தோறும் பொது விநியோக திட்ட ஆலோசனைக் குழுக்களும், கோட்ட அளவில் ஆலோசனைக் குழுக்களும் மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மேயர்கள், இதர கிராம பஞ்சாயத்து தலைவர்கள் ஆகியோர், அவர்கள் பகுதிகளில் செயல்படும் நியாயவிலை அங்காடிகளை தணிக்கை செய்யவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

<u>கூடுதலாக மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு நடவடிக்கைகள்</u>:–

பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் அனுமதிகளை ரத்து செய்யவும், ஓட்டுநர்களின் உரிமங்களை ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மானயத்துடன் கூடிய வீட்டு உபயோகத்திற்கான எரிவாயு உருளைகளை கள்ளச்சந்தையில் பயன்படுத்துவதை தடுப்பதற்காக சிறப்பு தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முறைகேடாக பொது விநியோகத் திட்ட அரிசியை பெற்று அவற்றை அரவை செய்த அரிசி போல மறுசுழற்சி செய்த சில தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நெல் அரவை முகவர்கள் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்படுகின்றன.

அண்டை மாநிலங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் சிறப்பு தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அரிசி கடத்தலில் ஈடுபடும் வாகனங்களையும், கடத்தப்பட்ட அரிசியையும் கைப்பற்றுகை செய்து குற்றவாளிகளுககு எதிரான சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடரப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகளால் இன்றியமையாப் பண்டங்களை கடத்த முற்படும் சமூகவிரோதிகளின் மனதில் அச்சம் ஏற்பட்டுள்ளது. இவ்விதமான கடுமையான நடவடிக்கைகளின் மூலம் அத்தியாவசியப் பண்டங்களின் கடத்தல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

2. நியாயவிலை அங்காடிகள் அத்தியாவசியப் பண்டங்களில் முறைகேடுகளைத் தடுப்பதற்கான பதலறிக்கை:

பொது விநியோகத் திட்ட கண்காணிப்பு பணியினை பலப்படுத்தும் வகையில் மாநலி அளவில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையரது தலைமையில் துணை ஆணையாளர் (ந) வடக்கு மற்றும் தெற்கு, சென்னையிலுள்ள 17 மண்டல உதவி ஆணையர்கள், களப்பணியாளர்கள் மற்றும் ஆணையர் அலுவலக பறக்கும் படை அலுவலர்கள்/துறை ஆணையர் (ந) வடக்கு/தெற்கு அலுவலக பறக்கும் படை அலுவலர்கள் கண்காணிப்பு பணியினை மேற்கொண்டு செயல்பட்டு வருகின்றனர். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலும், கோட்ட அளவில் கோட்டாட்சியர் தலைமையிலும், ஆலோசனை குழுக்கள் அமைக்கப்பட்டு நியாயவிலை அங்காடிகளை ஆய்வு செய்யவும், செயல்பாட்டினை கண்காணிக்கவும் அனுமதியளித்து அரசு ஆணையிட்டுள்ளது. ஆலோசனைக் குழுவில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ

நுகர்வு அமைப்பினர் உறுப்பிபனர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மேயர்கள் மற்றும் ஊராட்சிமன்ற தலைவர்கள் நியாயவிலை அங்காடிகளை ஆய்வு செய்யவும், செயல்பாட்டினையும், சேவைகளையும் கண்காணிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2015–2016ம் நிதியாண்டிற்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கீழ்க்கண்டவாறு நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்ய மாதாந்திர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பதவி | மாதாந்திர இலக்கு |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர் | 10 |
| 2. | கூடுதல் ஆட்சித் தலைவர்/மாவட்ட வருவாய் அலுவலர் | 20 |
| 3. | துணை ஆணையாளர் (ந) வடக்கு/தெற்கு | 30 |
| 4. | மாவட்ட வழங்கல் அலுவலர் | 30 |
| 5. | துணை ஆட்சியர்/கோட்ட ஆட்சியர் | 20 |
| 6. | வட்ட வழங்கல் அலுவலர்/உதவி ஆணையர் (சென்னை நகரம்) கண்காணிப்பாளர் மற்றும் தணிக்கை ஆய்வாளர் (சென்னை நகரம்) ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து நியாயவிலைக் கடைகளையும் ஆய்வு செய்ய வேண்டும். | 50 |
| 7. | தனி வருவாய் ஆய்வாளர் | 35 |

மேலும், கூட்டுறவுத் துறை அலுவலர்கள் நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்ய மாதாந்திர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் தலைமையில் ஒவ்வொரு மாதமும், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுத் துறை உடனான மாதாந்திர செயலாக்கக் கூட்டம் நடத்தப்பட்டு இப்பணி குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

கூட்டத்தின்போது, ஒவ்வொரு மாதமும் மேற்கண்ட அலுவலர்களால் நியாயவிலை அங்காடிகள் தணிக்கை செய்யப்படுவது, தணிக்கையின்போது கண்டறியப்படும் குறைபாடுகள், நியாயவிலைக் கடை பணியாளர்களால் இருப்புக் குறைவு, போலிப்பட்டியல்கள் மூலம் முறைகேடு செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களுக்கான அரசுக் கணக்கில் செலுத்தப்படவேண்டிய இழப்பீட்டுத் தொகை, அரசுக் கணக்கில் செலுத்தப்பட்ட தொகை ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதன்படி, ஜனவரி 2015–ம் மாதம் முதல் ஜுலை 2015–ம் மாதம் வரையில் 1,41,426 நியாயவிலை அங்காடி தணிக்கைகள் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, மேற்கண்ட காலத்தில் முறைகேடு செய்யப்பட்ட அத்தியாவசியப் பொருட்களுக்காக ரூ.32,25,105/– (ரூபாய் முப்பத்திரண்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து நூற்றைந்து மட்டும்) இழப்பீட்டுத் தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், நியாயவிலைக் கடைகளில் வாலாய தணிக்கைகளின்போதும், திடீர் ஆய்வுகளின்போதும், அதிகபட்ச அளவில் முறைகேடு செய்யும் நியாயவிலை கடை பணியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. குறிப்பாக, வெளிச்சந்தை விலையில் ரூ.5000/–க்கு மேலான மதிப்பில் அத்தியாவசியப் பொருட்கள் முறைகேடாக கையாடல் செய்யப்படும் இனங்களில் துறைவாரியான நடவடிக்கைகள் மேற்கொண்டு கடும் தண்டனைகள் வழங்கப்படுகிறது.

மேலும், மேற்கண்ட காலத்தில் 37 இனங்களில் ரூ.10,000/–க்கும் மேலான மதிப்பில் அத்தியாவசியப் பொருட்கள் கையாடல் செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. 78 இனங்களில் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப்பட்டது. 19 பணியாளர்கள் நிரந்தர பணிநீக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளனர். இவ்வினங்களில் மேற்கண்ட காலத்தில் ரூ,23.07 இலட்சம் சம்பந்தப்பட்ட பணிாளர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து குற்றங்களில் ஈடுபடும் பணியாளர்களைக் கண்டறிந்து கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

தமிழ்நாடு அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955, கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தைப் பராமரித்தல் ஆணை 1980–ன் கீழ் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு குற்றவாளிகள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## <u>கைது செய்யப்பட்டவர்கள் விவரம்</u>

இதன்படி, 16.05.2011 முதல் 25.08.2015 வரை நியாயவிலைக் கடைகளில் முறைகேட்டிற்கு காரணமான 423 நியாயவிலைக் கடை ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 11 நபர்கள் கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

## <u>கூட்டுறவுத் துறை நியாயவிலைக் கடை பணியாளர்கள் மீதான நடவடிக்கை விவரம்</u>

கூட்டுறவுத் துறையில் 2011–ம் ஆண்டு முதல் ஜுலை 2015–ம் மாதம் வரையில் நியாயவிலைக் கடை பணியாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் விவரம்:

| முறைகேடுகள் புரிந்த விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்ட விவரம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | (ரூபாய் இலட்சங்களில்) |
| வருடம் | நிரந்தர பணிநீக்கம் | தற்காலிக பணிநீக்கம் | பணி இறக்கம்/ பணி மாற்றம் | மீண்டும் பணியமர்த்தம் | விதிக்கப்பட்டது | வசூலிக்கப்பட்டது | உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு |
| 2011–2012 | 103 | 656 | 82 | 157 | 500 | 569.84 | 86 |
| 2012–2013 | 70 | 662 | 0 | 1 | 675.25 | 622.94 | 33 |
| 2013–2014 (மார்ச் வரை) | 24 | 755 | 1 | 20 | 821.72 | 700.19 | 72 |
| 2014–2015 (மார்ச் 15 வரை) | 13 | 678 | 0 | 29 | 1087.30 | 959.01 | 42 |
| 2015–2016 (ஜுலை 15 முடிய) | 0 | 164 | 0 | 252 | 347.57 | 307.8 | 8 |
| | 210 | 2915 | 83 | 459 | 3432.37 | 3159.78 | 241 |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 2010 முதல் 2015 வரையிலான ஆண்டு காலத்தில் 19 நியாயவிலைக் கடை பணியாளர்கள் நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 88 பணியாளர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்து துறைவாரி நடவடிக்கை எடுக்கப்பட்டது.